செ.வெ.எண்:18 நாள்:13.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் சினிமா திரையரங்குகளில், அரசு நிர்ணயம் செய்த பார்வையாளர் அனுமதி கட்டணத்தொகையை விட கூடுதலாக கட்டணம் வசூல் செய்திடும் சினிமா திரையரங்குகளை கண்காணித்திடவும், நடவடிக்கை எடுத்திடவும் கீழ்க்கண்டவாறு கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**அரியலூர் கோட்டம்** - வருவாய் கோட்டாட்சியர், அரியலூர் - கைபேசி எண்.9445000459, காவல் துணை கண்காணிப்பாளர், அரியலூர் - கைபேசி எண்.9498100706, வணிகவரி அலுவலர், அரியலூர் - கைபேசி எண்.9952841424.

**உடையார்பாளையம் கோட்டம்** - வருவாய் கோட்டாட்சியர், உடையார்பாளையம் - கைபேசி எண்.9445000460, காவல் துணை கண்காணிப்பாளர், ஜெயங்கொண்டம் - கைபேசி எண்.9498100707, வணிகவரி அலுவலர், ஜெயங்கொண்டம் - கைபேசி எண்.9445195186.

அனைத்து நாட்களிலும் பொதுமக்களிடம் இருந்து புகார்களைப் பெறவும் அப்புகார்கள் குறித்து 24 மணி நேரத்திற்குள், தொடர்புடைய திரையரங்குகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்து ஆய்வு அறிக்கையினை அனுப்பிடுமாறு கண்காணிப்புக்குழு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் சினிமா திரையரங்குகளில் அரசு நிர்ணயம் செய்த கட்டணத்தொகையை விட கூடுதலாக பார்வையாளர் அனுமதி கட்டணம் வசூல் செய்யப்பட்டால், இது தொடர்பாக புகார்களை மேற்படி அலுவலர்களின் கைப்பேசி எண்களுக்கு சம்மந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கான தொலைபேசி எண்ணாகிய 1077 என்ற தொலைபேசி எண்ணிலும் பொதுமக்கள் தொடர்பு கொண்டு புகார் தெரிவித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.